வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ஈழநாடு


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 05.01.2026 திங்கட்கிழமை | இதழ் : 05 | பக்கங்கள் : 08

# புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டமிட்டபடி அமுலாகும்!

## பிரதமர் ஹரிணி அறிவிப்பு



கொழும்பு, ஜனவரி 05

ஐந்து முக்கிய துறைகளின் கீழ் புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டமிட்டப்படி நடைமுறைப்படுத்தப் படும் என்று தெரிவித்துள்ள கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய, இதன்படி தரம் 6 மாணவர்களுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதியிலிருந்தும் தரம் 1 மாணவர்களுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதியிலிருந்தும் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வரும் என்றும் கூறியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டின் கல்வி முறையில் நீண்டகாலமாக நிலவி வரும் குறைபாடுகளை நீக்கி மாணவர்களின் நடைமுறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஐந்து முக்கிய துறைகளின் கீழ் பெரும் கல்வி மறுசீரமைப்புகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய கல்வி மறுசீரமைப்புக்காக வரவு - செலவு திட்டத்தில் 2 ஆயிரத்து 498.6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், பெரும் பகுதி அதாவது, ஆயிரத்து 07

தரம் 6 ஆங்கில பாட நூல் சர்ச்சை:

## அறிக்கை சமர்ப்பித்தது உள்ளக விசாரணை குழு

கொழும்பு, ஜன. 05

புதிதாக அச்சிடப்பட்ட தரம் 6 ஆங்கில மொழிப் பாடத் தொகுதியில் பொருந்தாத இணையத்தளம் ஒன்றை குறிக்கும் விடயம் உள்ளடக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, அது குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட உள்ளக குழு தனது அறிக் கையை சமர்ப்பித்துள்ளது என்று அமைச்சர் விஜித ஹேரத் உறுதிப்படுத்தியுள்ளார். 07

## சகல பாடசாலைகளும் இன்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 05

2026 புதிய கல்வியாண்டுக்காக சகல பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை முதல் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சகல பாடசாலைகளும் இன்றுமுதல் எதிர்வரும் 9ஆம் திகதி வரை நடைபெறும். பின்னர், 07

## வெனிசுலா ஜனாதிபதி கைது; ஜே. வி. பி. கண்டித்து அறிக்கை

கொழும்பு, ஜன. 05

"சுதந்திரமான, இறைமையுள்ள நாடான வெனிசுலாவுக்குள் அத்துமீறி நுழைந்து, மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மற்றும் அவரது மனைவியை கடத்திச் சென்று மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையை கண்டிக்கிறோம்", என்று ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தாய் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சி நேற்று வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு, "சுதந்திரமான, இறைமையுள்ள நாடான 07

## சகல நாடுகளின் இறையாண்மை பாதுகாக்கப்படுதல் வேண்டும்!

### இதுவே அரசின் நிலைப்பாடு என்கிறார் விஜித



கொழும்பு, ஜன. 05

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம், சர்வதேச சட்டங்களின்படி அனைத்து நாடுகளின் இறையாண்மையும் பாதுகாக்கப்பட வேண்டும். இதுவே, அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடத்திய விசேட ஊடக சந்திப்பிலேயே 07

## 600 கிலோ கஞ்சா எரியூட்டி அழிப்பு

த.பிரதீபன், சி.தில்லைநாதன்

வடமராட்சி, ஜன. 05

பருத்தித்துறை நீதிமன்றத்தால் 600 கிலோ கஞ்சா போதைப்பொருள் நேற்றைய தினம் எரியூட்டி அழிக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து கடல் வழியாகக் கடத்தி வரப்பட்ட இந்த கஞ்சா 07

தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம்:

## யாழ். அரசாங்க அதிபருடன் நயினை விகாராதிபதி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 05

நயினாதீவு நாக விகாரை விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ தேரர் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் ம. பிரதீபனை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன், மாவட்ட செயலரால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விகாராதிபதி கேட்டறிந்தார். மேலும் தனது நிலைப்பாட்டையும் மாவட்ட செயலரிடம் தெரியப்படுத்தினார்.

இதேநேரம், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட விகாராதிபதி, "தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழ விகாரைக்கு என அடாத்தாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தனியாருக்குச் சொந்தமானவை. அவற்றில் தற்போது விகாரை அமைந்துள்ள சுமார் 1.2 07



## இந்திய இராணுவ தளபதி இலங்கை வருகின்றார்!



புதுடில்லி, ஜன. 05

இந்தியாவின் இராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி இரு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வரவுள்ளார்.

நட்பு நாடுகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் 07

கன்னியா வெந்நீரூற்று விவகாரம்

## இணக்கப்பாட்டை மீறினால் நீதிமன்றத்தை நாடுவோம்!

திருகோணமலை, ஜன. 05

கன்னியா வெந்நீரூற்று விவகாரத்தில் இணக்கப்பாட்டுக்கு மாறாக செயல்பட்டால் நீதிமன்றத்துக்கு செல்வோம் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் திருகோணமலை - கன்னியா வெந்நீரூற்றுக்கு சென்ற அவர், அங்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை பார்வையிட்டார். இதைத் தொடர்ந்து ஊடகங்களிடம் 07

## வடக்கு வர்த்தகர்களிடம் 2.4 கோடி ரூபாய் அபராதம்

குமார. கோகுலன்

வவுனியா, ஜன. 05

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபாரத்தில் ஈடுபட்ட வடக்கு வர்த்தகர்களுக்கு 2 கோடியே 48 இலட்சத்து 40 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் வடக்கு உதவிப் பணிப்பாளர் ப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்துள்ளார்.

கடந்த 2025ஆம் ஆண்டு வடக்கு மாகாணத் தில் 3 ஆயிரத்து 174 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. 3062 வர்த்தகர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 818 சுற்றிவளைப்புகளில் 801 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதன்கீழ் 77 இலட்சத்து 24 ஆயிரம் 07


## எம். பி.க்களுக்கான ஓய்வூதியத்தை நீக்கும் சட்டமூலம் வர்த்தமானியில்

கொழும்பு, ஜன. 05

1977ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நீக்குவதற்கான சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்சன நாணயக்காரவின் பணிப்புரைக்கு அமைய இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் சிவன் கோவில் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் காலை மிகவும் பக்தி பூர்வமாக நடைபெற்றபோது...

(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

## த. தே. ம. முன்னணியினர் நோர்வேயில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 05

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் குழு நோர்வே சென்றுள்ளது.

அந்தக் குழுவினர் ஒஸ்லோவில் புலம்பெயர் தமிழர்களுடனான சந்திப்பு ஒன்றை நேற்று நடத்தியது.

இந்தச் சந்திப்பில் அரசாங்கத்தின் புதிய அரசமைப்பு மற்றும் தாயக தமிழர்களுக்கான சமஷ்டி அதிகாரம் குறித்து பேசப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

நோர்வே சென்ற குழுவில் கட்சியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன், பேச்சாளர் சுகாஷ், கொள்கை பரப்புச் செயலாளர் ந. காண்டீபன் ஆகியோர் உள்ளடங்குவர். (ஐ)

## துப்பாக்கிச்சூடு நடத்தி இருவர் கைது

கொழும்பு, ஜன. 05

பொரளை பொலிஸாரின் சமிக்ஞையை மீறி தப்பிச் சென்ற மோட்டார் சைக்கிள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய பின்னர் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப் பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளை ஓட்டியவரிடம் இருந்தே 2,620 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது. (ஐ)

## இரத்தினக்கல் சர்வதேச மையமாக இலங்கையை மாற்றவே எதிர்பார்ப்பு

### அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி



கொழும்பு, ஜன. 01

இலங்கையை இந்த வருடத்துக்குள் சர்வதேச இரத்தினக்கல் வர்த்தக மையமாக மாற்ற நாம் எதிர்பார்க்கிறோம். இதற்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை மற்றும் ஏனைய வர்த்தக சபைகளுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன என்று கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

சர்வதேச இரத்தினக்கல், ஆபரண கண்காட்சியை கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், இந்த ஆண்டு இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் முன்னரைவிட அதிக வருமானத்தை ஈட்ட நாம் எதிர்பார்க்கிறோம். இதற்காக ஜனவரி முதலாம் திகதி முதல் புதிய இறக்குமதி வரி கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது இந்தத்துறையில் உள்ள பலருக்கு பெரும் நிவாரணமாக அமைந்துள்ளது. ஏற்கனவே இருந்த வரி முறைக்கு பதிலாக புதிய வரி முறை இப்போது நடைமுறையில் உள்ளது. இந்த வருடத்துக்குள் இலங்கையை சர்வதேச இரத்தினக்கல் வர்த்தக மையமாக மாற்ற நாம் எதிர்பார்க்கிறோம். இதற்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை மற்றும் ஏனைய வர்த்தக சபைகளுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தாய்லாந்து, ஹொங்கொங், துபாய் போன்ற நாடுகளுடன் இணைந்து இலங்கையையும் சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சி நாட்காட்டியில் சேர்க்க பேச்சுகள் நடத்தப்படுகின்றன. அடுத்த ஆண்டாகும் போது நாட்டின் இரத்தினக்கல் வருமானத்தை 100 கோடி டொலர்களுக்கும் அதிகமாக உயர்த்துவதே எமது இலக்காகும் - என்றார்.

(ஐ)

## யாழ் மாநகரசபை வரியிறுப்பாளர் கவனத்திற்கு

வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங்களுக்கான 2026 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை ஜனவரி ஆம் திகதிக்குள் செலுத்தி 10% கழிவினையும், காலாண்டிற்கான ஆதனவரியினை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தி 5% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ் மாநகர சபையின் கௌரவ முதல்வர் வி.மதிவதனி அவர்கள் தெரிவித்துள்ளார்.

| விபரம் | செலுத்த வேண்டிய திகதி | கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி | கழிவு வீதம் |
|---|---|---|---|
| முழு ஆண்டுக்குமானது (01.01.2026 - 31.12.2026) | 01.01.2026 - 31.01.2026 | 31.01.2026 | 10% |
| முதலாவது காலாண்டு | 01.01.2026 - 31.03.2026 | 31.01.2026 | 5% |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2026 - 30.06.2026 | 30.04.2026 | 5% |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2026 - 30.09.2026 | 31.07.2026 | 5% |
| நான்காவது காலாண்டு | 01.10.2026 - 31.12.2026 | 31.10.2026 | 5% |

மேலும் யாழ் மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும், தைப்பொங்கல் தவிர்ந்த பொது விடுமுறை நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையும் ஆதனவரியினைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறிவித்தல் (K form) கிடைக்கப் பெறாதவர்கள் இதற்கு முன்னைய ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல் அல்லது ஆதன வரி செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டு அல்லது ஆதனம் அமைந்துள்ள வட்டாரம், வீதி மற்றும் ஆதன இலக்கம் போன்ற விபரங்களை சமர்ப்பித்தும் 2026ஆம் ஆண்டிற்கான ஆதனவரியைச் செலுத்த முடியும்.

இதே போன்றே கடந்த காலங்களுக்கான ஆதனவரி நிலுவைகளையும் செலுத்துவதன் மூலம் சேவைகளையும் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும். 2025ஆம் ஆண்டின் ஆதனவரிப் பெறுமதியிலும் கட்டணங்களிலும் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

2026ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் முழுமையாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் 31.12.2025ஆம் திகதிக்குள் ஆதனவரி அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் பெறாதவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் யாழ் மாநகரசபையின் ஆதனவரி பகுதியுடன் தொடர் கொள்ளுமாறும் கௌரவ முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வி.மதிவதனி
மாநகர முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

## ச.தொ.சவின் முன்னாள் போக்குவரத்து முகாமையாளருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜன. 05

ச.தொ.சவின் முன்னாள் போக்குவரத்து முகாமையாளர் இந்திக்க ரத்னமல்லவை எதிர்வரும் 9 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ச. தொ. சவுக்குச் சொந்தமான லொறி ஒன்றை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் ச.தொ. சவின் முன்னாள் போக்குவரத்து முகாமையாளர் இந்திக்க ரத்னமல்ல நிதிக்குற்ற விசாரணை பிரிவினரால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகனான ஜோஹான் பெர்னாண்டோ, ச. தொ. சவுக்கு சொந்தமான லொறி ஒன்றை முறைகேடாக பயன்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

(எ)

## கனடாவிலிருந்து வந்தவர் நிமோனியாவால் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 05

கனடாவில் இருந்து விடுமுறைக்காக யாழ்ப்பாணம் வந்தவர் நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்தார்.

புலம்பெயர்ந்து கனடாவில் வசித்து வந்த பரமநாயகம் திவாகர் (வயது 42) அண்மையில் விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்து வட்டுக்கோட்டையில் தங்கியிருந்தார்.

இவருக்கு கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

நிமோனியா காய்ச்சலே அவர் உயிரிழக்கக் காரணம் என்று மருத்துவர்களின் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
05.01.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அரசமைப்பு பேரவை விவகாரம்

அரசமைப்பு பேரவையிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பதவி விலகவேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுவில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதனை சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கிறார். இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரான சிறீதரன் அந்தக் கட்சியின் சார்பில் அரசமைப்பு பேரவையில் அங்கம் வகித்து வருகிறார். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் கணக்காய்வாளர் நாயகமாக முன்மொழியப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிக்கு சிறீதரன் அரச பிரதிநிதிகளோடு இணைந்து ஆதவளித்தாரென அவர்மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டிருக்கின்றன.

சமூக ஊடகங்களிலும் இதுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலமும் இது தொடர்பில் கண்டித்திருந்தார். இந்த நிலையில்தான் இலங்கை தமிழ் அரசு கட்சி சிறீதரன் பதவி விலக வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் நோக்கினால் அதன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசாங்கத்தின் நிலைப்பாடுகளுடன் ஒத்துப்போக முடியாது. இந்த விடயத்தில் மட்டுமல்ல, அரசாங்க ஆதரவு நிலைப்பாடுகள் எவற்றுடனும் ஒத்துப்போகமுடியாது. அது தமிழ் மக்களின் நலன்சார்ந்த விடயமாக இருந்தால் மட்டும்தான் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் பிரதிநிதிகள் விடயங்களை ஆதரிக்க முடியும். ஏனெனில், தேர்தல் காலத்தில் அவ்வாறான பிரசாரங்களையே தமிழ்க் கட்சிகள் மேற்கொண்டிருந்தன.

குறிப்பாக, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிர்த்தே தமிழ்த் தேசிய நிலைப்பாடுள்ள கட்சிகள் அனைத்தும் கடுந்தொனியிலான பிரசாரங்களை முன்னெடுத்திருந்தன. இந்த நிலையில் அரசாங்கத்தின் தீர்மானங்களை ஆதரிப்பதானது கட்சி ரீதியாக நோக்கினால் தவறானது. ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சி ரீதியில் எவ்வாறான ஒழுக்க விதிகள் இருக்கின்றன என்பது கேள்விக்குரியது.

பாராளுமன்ற பேச்சுகளின்போது எவ்வாறான விடயங்களை முன்வைக்க வேண்டும், எவ்வாறான விடயங்களை முன்வைக்கக்கூடாது என்னும் அடிப்படையிலான ஒழுக்க விதிகள் எவையும் கட்சியால் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புவதை பேசலாம் என்னும் அடிப்படையிலேயே விடயங்களை முன்வைக்கின்றனர். இந்த நிலையில்தான் அரசமைப்பு பேரவையிலும் சுயவிருப்பின் பெயரில் செயல்படும் நிலைமை உருவாகிறது. முக்கியமான முடிவுகள் எடுக்கப்படுகின்றபோது கட்சியின் உயர்பீடத்துடன் கலந்துரை யாடிய பின்னர்தான் முடிவுகளை எடுக்க முடியும் என்னும் நிலைமை இருந்திருந்தால் இவ்வாறான முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருந்திருக்காது. இலங்கை தமிழ் அரசு கட்சியின் உள்மோதல்களும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகளின் வேட்பாளர் தெரிவிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் - அணுகுமுறைகள் தொடர்பில் எந்தவோர் ஒழுக்கக் கோவையும் இல்லை. இதன் காரணமாகவே, தவறானவர்கள்கூட கட்சிகளுக்குள் உள்வாங்கப் படும் நிலைமை ஏற்படுகிறது.

# கல்வி சீர்திருத்தங்கள் கல்வி சார் அறிவியல் அடிப்படையற்றவை

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 05

அரசாங்கம் முன்னெடுத்து வரும் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் எந்தவித கல்வி சார் அறிவியல் அடிப்படையுமற்றவை- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் உள்ள இலங்கை அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்க முன்னணி காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"புதிய கல்விச் சீர்திருத்த செயல்முறையில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன.

6 ஆம் தரத்துக்கான பாடத்திட்டத்தில் பெரும் குழப்பம் நிலவுகிறது. ஆரம்பத்தில் 14 பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. பின்னர் அந்த பாடத் தொகுதிகள் 6 ஆகக் குறைக்கப்பட்டு, பின் 10 ஆக அதிகரிக்கப்பட்டு, தற்போது மீண்டும் 6 பாடங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இதில் மிகவும் பாரதூரமான விடயம் என்னவென்றால், இந்த புதிய கட்டமைப்புக்குள் ஆங்கில மொழி பாடம் உள்வாங்கப்படவில்லை.

நாட்டில் கல்விச் சீர்திருத்தம் அவசியம் என்பது நீண்டகாலமாக இருந்து வரும் கோரிக்கையாகும். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என அனைத்துத் தரப்பினரும் தற்போதைய தேங்கிக் கிடக்கும் கல்வி முறையால் அதிருப்தியடைந்துள்ளனர். பொதுவாக எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாடத்திட்டம் மாற்றப்பட வேண்டும். அந்த வகையில் 2023இல் மாற்றப்பட்டிருக்க வேண்டிய பாடத்திட்டம் மாற்றப்படவில்லை.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது 2023இல் செய்யத் தவறிய மாற்றங்களை முன்னுரிமைப் படுத்தி ஒரு முறையான திட்டத்துடன் செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் ஆட்சிக்கு வரும்போது அத்தகைய திட்டங்கள் எவையும் இருக்கவில்லை. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட கல்வி கொள்கைகளுக்கும், தற்போது நடைமுறையில் அவர்கள் செய்வதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. எந்தவிதத் திட்டமும் இன்றி கல்வியை இங்கும் அங்குமாக அலைக்கழித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் 40 இலட்சம் மாணவர்களின் எதிர்காலமே பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது.

தற்போது முன்னெடுக்கப்படும் இந்தச் சீர்திருத்தங்கள் வெறும் எண்கணித ரீதியிலான மாற்றங்களே தவிர வேறொன்றுமில்லை. பாடசாலை நேரம் இரண்டு மணி என்றால் அதற்கேற்பவும் ஒன்றரை மணி என்றால் அதற்கேற்பவும் நேரத்தை சரிக்கட்டுவதையே அவர்கள் செய்கிறார்கள். இதில் கல்வி சார் அறிவியல் அடிப்படைகள் எவையும் பின்பற்றப்படவில்லை"- என்றார்.

(எ)

# கொழும்பில் கண்காணிப்பு கமராக்கள் செயலிழப்பு

கொழும்பு, ஜன. 05

கொழும்பு மாநகரில் போக்குவரத்து கண்காணிப்புக்காக பொருத்தப்பட்டுள்ள கிட்டத்தட்ட 130 கண்காணிப்பு கமராக்களில் ஐம்பதுக்கும் அதிகமான கமராக்கள் பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக செயலிழந்தன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த கமராக்கள், உரிய முறையில் பராமரிக்கப்படாமை மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்ட கமராக்கள் மாற்றாக பொருத்தப்படாமை ஆகிய காரணங்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்கும் வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இந்த கமராக்கள் முக்கிய வீதிகளில் பொருத்தப்பட் டுள்ளன.

இதேவேளை, போக்குவரத்து விதிகளை மீறும் வாகன சாரதிகளை அடையாளம் கண்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக் கும் திட்டமும் அண்மையில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில், கொழும்பில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஐந்து புதிய பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன என்று போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்பு பணியகத்துக்கு பொறுப்பான துணை பொலிஸ் அதிகாரி பி. ஜே. சேனாதீர தெரிவித்தார்.(எ)

# ஆணின் சடலம் மீட்பு இறப்பில் சந்தேகம்!

கொழும்பு, ஜன. 05

சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட் டுள்ளது.

நேற்றுமுன்தினம் மோட் டார் சைக்கிளில் பயணித்திருந்த நபரே மொனராகலை - ஹளந்தாவ பகுதியில் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார். அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் 55 வயதுடையவராவார்.

இந்த மரணம் விபத்தால் ஏற்பட்டதா அல்லது வேறு கார ணம் உள்ளதாக என்பது தொட ர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 05 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - மார்கழி 21
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : திரிதியை




**மேடம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**இடபம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரம் செழிக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சி வசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து நிற்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்**
எங்குச் சென்றாலும் மதிப்பு மரியாதைக் கூடும். பழைய சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். கோரிக்கை ஏற்கப்படும். இனிமையான நாள்.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் சமாத்தியம் பிறக்கும். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரம் சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். புண்ணியஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். மறைமுக நெருக்கடிகளை சமாளிப்பீர்கள். கவனம் தேவைபடும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். விருந்தினர்களின் வருகை உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்யோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**மகரம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் அதிசியக்கும்படி நடந்துக் கொள்வீர்கள்.

**கும்பம்**
புதிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்று வீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**மீனம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத உதவி கிட்டும் நாள்.

# “மக்களின் விவரங்கள் பொலிஸாரால் பதிவு: அரசின் அடக்குமுறையின் வெளிப்பாடே”

யாழ்ப்பாணம், ஜன. 05

தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த மக்களின் விரங்களை பொலிஸார் பதிவு செய்தமை, அநுர அரசாங்கத்தின் அடக்குமுறையின் வெளிப்பாடே என சிவகுரு ஆதீனத்தின் குரு முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

“தையிட்டி மக்களின் காணிகளில் அத்துமீறி கட்டப்பட்ட சட்டவிரோத திஸ்ஸ விகாரை கட்டுமானத்தை அகற்றி, மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும்.

இதனை வலியுறுத்தி சனிக்கிழமை தையிட்டி விகாரைக்கு அண்மையில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, போராட்டத்துக்கு வருகை தந்தவர்களின் பெயர் மற்றும் வாகன இலக்கங்களை பொலிஸார் பதிவு செய்த பின்னரே அவர்களை உள்ளே செல்ல அனுமதித்தனர்.

இலங்கையில், குறிப்பாக தமிழர் பகுதிகளில் இடம்பெறும் போராட்டங்களில் கலந்து கொள்பவர்களை குறைப்பதற்காக உளரீதியாக அச்சுறுத்தும் செயல்பாடுகளில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இதன் வெளிப்பாடே தையிட்டி போராட்டத்துக்கு வந்தவர்களின் விவரங்களை பதிவு செய்தமையாகும். இதன் மூலம் எதிர்காலத்தில் மக்கள் போராட்டங்களில் கலந்து கொள்ளாத வகையில் அச்சுறுத்தும் செயல்பாட்டை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கம், தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையான போராடும் உரிமையை பறிப்பது, இலங்கையில் தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகள்தான் என்பதை உறுதிப்படுத்துகிறது.

எனினும், அடக்குமுறைகளை கண்டு தமிழ் மக்கள் அஞ்சமாட்டார்கள். அடக்குமுறைகள் அதிகரிக்கும்போது தமிழ் மக்கள் தாமாகவே கிளர்ந்து எழும் சூழலை பொலிஸ்துறையே உருவாக்கும்”-என்றார். (எ)

# புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு முன் தமிழர் தரப்புடன் பேச்சு நடத்த வேண்டும்

**அரசிடம் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தல்**

யாழ்ப்பாணம், ஜன. 05

புதிய அரசமைப்பு உருவாக்கப்பணிகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் தமிழர்களுக்கான தீர்வாக எதனை முன்வைக்கப் போகிறார்கள் என்பது பற்றி முதலில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தமிழர் தரப்புடன் பேச வேண்டும். இருப்பினும், மக்கள் விடுதலை முன்னணியின் கடந்த கால செயல்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் ஆக்கபூர்வமான நேர்மறை நகர்வுகளை எதிர்பார்க்க முடியவில்லை என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான ஆரம்பகட்டப் பணிகளை இம்மாதம் மேற்கொள்வோம். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக தீர்வு காணப்படும். தமிழ் அரசியல் தரப்பினர் காலங்காலமாக முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை விடுத்து, பொதுக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு சிறந்த பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார குறிப்பிட்டிருந்தார்.

இது பற்றி கருத்துரைத்த சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் கூறுகையில்,

கடந்த பல வருடகாலமாக பல்வேறு தரப்பினரால் பல வடிவங்களிலான தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. எனவே, புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் தமிழர்களுக்கான தீர்வாக எதனை முன்வைக்கப் போகிறார்கள் என்பது பற்றி முதலில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தமிழர் தரப்புடன் பேச வேண்டும்.

இதுவரையில் நாட்டை ஆட்சிசெய்த அரசாங்கங்கள் தமிழர்களின் தேவைப்பாடுகளையும் கரிசனைகளையும் காதுகொடுத்து கேட்கவில்லை. அதுமாத்திரமன்றி நாட்டுமக்கள் அனைவருக்கும் பொதுவான சட்டமாக உருவாக்கப்பட்ட அரசமைப்பு, பெரும்பாலும் பெரும்பான்மையினத்தவருக்கு சார்பாகவே உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# அல்லைப்பிட்டி அலுமினியம் தொழிற்சாலை வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 05

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசின் 1000 கிராமிய வீதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம்- வேலணை பிரதேசத்தின் அல்லைப்பிட்டி அலுமினியம் தொழிற்சாலை வீதியை காப்பெற் வீதியாக அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவனால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மக்களின் அவசிய தேவை கருதி தேசிய மக்கள் சக்தியின் வேலணை பிரதேச சபை உறுப்பினரான ஆனந்தராசா சதீஸ்குமாரின் திட்ட முன்மொழிவுடன் தெரிவு செய்யப்பட்ட குறித்த வீதியின் அபிவிருத்திக்கான ஆரம்பப் பணிகளை ரஜீவன் எம். பி. ஆரம்பித்து வைத்தார்.

குறித்த 1000 கிராமிய வீதிகள் அபிவிருத்தி திட்டத்தின் முதற் கட்டமாக வடக்கில் 25 வீதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் வேலணை பிரதேசத்தில் 30. 7 மில்லியன் ரூபாய் நிதியில் 1.3 கிலோ மீற்றர் தூரம் கொண்ட குறித்த வீதி காப்பெற் மற்றும் கொங்கிரீற் ஆகிய இரு வகைகளிலும் குறித்த பகுதியின் நீரோட்டத்துக்கு இயைவாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதனிடையே குறித்த பகுதியில் இருக்கும் மற்றொரு அவசிய வீதியான மண்டைதீவு இணைப்பு வீதியையும் அபிவிருத்தி செய்து தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவனிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (எ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழை நிலைமை அதிகரிக்கும்

கொழும்பு, ஜன. 05

இலங்கைக்கு கிழக்காக விருத்தியடைந்த கீழ் வளிமண்டல தளம்பல் நிலை நாட்டின் வானிலையில் தொடர்ந்தும் தாக்கம் செலுத்தி வருகின்றது.

எனவே, 05ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் நாட்களில் வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மழை நிலைமை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது- இவ்வாறு வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்திலும் அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் பிற்பகல் 02. 00 மணிக்கு பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவு பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை, கம்பஹா, கொழும்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் திட்டத்துக்காக மின் பாவனையாளர்மீது சுமை!

**தயாசிறி ஜயசேகர எம். பி.**

கொழும்பு, ஜன. 05

**மின்சார சபை உத்தியோகத்தர்களை சுய ஓய்வு பெறச் செய்வதற்கான அரசாங்கத்தின் திட்டத்துக்காக நாட்டின் மின் பாவனையாளர்களிடமிருந்து ஒரு காலாண்டுக்கு 87.5 கோடி ரூபாயை அறவிட தீர்மானித்துள்ளனர். அந்த வகையில் 5 ஆண்டுகளுக்கு 1,750 கோடி ரூபா செலவு மின் பாவனையாளர்கள்மீது சுமத்தப்படவுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

மின்சார கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைப்பதாகக் கூறியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. 9 ஆயிரம் ரூபாய் கட்டணம் 6 ஆயிரம் ரூபாயாகக் குறைக்கப்படும் என்றும், 6 ஆயிரம் ரூபாய் கட்டணம் 3 ஆயிரம் ரூபாயாகக் குறைக்கப்படும் என்றும் தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வாக்குறுதியளித்திருந்தார்.

நாட்டிலுள்ள சுமார் 80 இலட்சம் மின் பாவனையாளர்கள் இந்த பொய் வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டனர். ஆனால், தற்போது 11 சதவீதத்தால் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனையை இலங்கை மின்சாரசபை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இவ்வாறு மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளமைக்கான காரணங்கள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று மின்சார சபையில் ஊழியர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக சுயமாக ஓய்வு பெறுவதற்கான முறைமைக்காக 5 ஆண்டுகளுக்கு கடன் தொகையைப் பெறவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது - என்றார்.

(ஐ)

# மகப்பேற்றியல் மருத்துவ சங்க தலைவராக ருவந்தி

கொழும்பு, ஜன. 05

இலங்கை மகப்பேற்றியல் மற்றும் மகளிர் மருத்துவ சங்கத்தின் 25ஆவது தலைவராக பேராசிரியர் ருவந்தி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரின் பதவியேற்பு விழா கொழும்பில் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன, சங்கத்தின் முன்னாள் தலைவர் மருத்துவர் ஹரேந்திர திஸநாயக்க, உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி மருத்துவர் ராஜேஷ் சம்பாஜி ராவ் பாண்டவ் எனப் பலர் பங்கேற்றனர்.

(ஐ)

# மோ. சைக்கிள்கள் திருட்டு; இளைஞர்கள் இருவர் கைது

கொழும்பு, ஜன. 05

இரு மோட்டார் சைக்கிள்களை திருடிய குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பு - மீகொடை பொலிஸார் சுற்றிவளைப்பு நடத்தினர். இதன்போதே மோட்டார் சைக்கிள்களை திருடிய குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரும் வெவ்வேறு பகுதிகளை சேர்ந்த 18, 21 வயதுடையவர்களாவர். மீகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# சுங்கப் பிரிவின் வருவாய் இலக்கு ரூ. 2.2 இலட்சம் கோடியாக நிர்ணயம்

கொழும்பு, ஜன. 05

இலங்கை சுங்கத்துறையின் வருவாய் இலக்கு நடப்பு ஆண்டில் 2 இலட்சத்து 20 ஆயிரத்து 600 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுங்க திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா இதனைத் தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதியில் இருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் வீழ்ச்சியை கருத்தில் கொண்டு இந்த தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைவிட வாகன இறக்குமதி குறையும் என்று எதிர்பார்ப்பதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் கூறியுள்ளார்.

(ஐ)

# துப்பாக்கிச்சூட்டில் சிறுமி காயம் 4 சந்தேகநபர்கள் கைதாகினர்!

கொழும்பு, ஜன. 05

கொழும்பு - கொஹுவளையில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 16 வயது காயமடைந்த சம்பவம் தொடர்பில் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், துப்பாக்கியை வைத்திருந்த நபர், துப்பாக்கியை கொண்டு சென்ற நபர் மற்றும் சந்தேக நபர்களுக்கு தங்குமிடம் வழங்கிய ஒருவர் என்று நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிசை பொலிஸ் பிரிவில் குற்றப் புலனாய்வுப் பணியகத்தினரால் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் தெகிவளையை சேர்ந்த 25, 28, 33, 45 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் இரு குழுக்களுக்கு இடையிலான மோதலின் விளைவாக நடந்ததாக ஆரம்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 03 ரிவால்வர் ரக துப்பாக்கிகள், 09 மில்லிமீற்றர் தோட்டாக்கள் பத்து, 50 கிராம் ஹெரோயின், 55 கிராம் ஐஸ் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

(ஐ)

# மத்திய ஆபிரிக்காவின் 14 படையினரை மீட்டெடுத்த இலங்கை இராணுவத்தினர்

கொழும்பு, ஜன. 05

மத்திய ஆபிரிக்க குடியரசின் 14 படையினரை இலங்கை விமானப் படையினர் மீட்டுள்ளனர்.

மத்திய ஆபிரிக்காவின் பம்பூட்டி பகுதியில் ஐக்கிய நாடுகள் தற்காலிக முகாமில் அந்த நாட்டின் 14 படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியாளர்கள் அந்தப் பகுதியைச் சூழ்ந்து தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் சிக்கியிருந்த அந்த படையினரை மீட்பதற்காக ஐ. நா. அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை விமானப் படையின் எம். ஐ. -17 உலங்கு வானூர்தி உடனடியாக களமிறக்கப்பட்டது.

அவர்களை மீட்க முயன்ற போது, கிளர்ச்சியாளர்கள் உலங்குவானூர்தி நோக்கியும் முன்னேறித் தாக்க முற்பட்டனர்.

இருப்பினும், இலங்கை விமானிகள் புத்திசாதுர்யமாக செயல்பட்டு அவர்கள் 14 பேரையும் மிகக்குறுகிய நேரத்துக்குள் மீட்டனர்.

மீட்கப்பட்ட வீரர்கள் அனைவரும் ஒபோ நகருக்கு வான்வழியாக அழைத்துச் செல்லப்பட்டு, பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்வோர் சட்டங்களை மீறி வியாபாரம்

# அம்பாறையில் 97 வர்த்தகர்களுக்கு 2 இலட்சத்து 60, 000 ரூபா அபராதம்!

கல்முனை, ஜன. 05

அம்பாறை மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகை ளில் ஈடுபட்ட 97 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களால் 02 இலட்சத்து 59 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி சாலிய பண்டார நவரத்ன நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட தகவலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தகண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்களில் மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவின் அலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 101 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இந்த வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இதில் 97 வர்த்தகர்களுக்கு 02 இலட்சத்து 59 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய வர்த்தகர்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு அத்தியாவசிய பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்கு பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்தமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்கள் சுற்றிவளைப்பின் போது கண்டுபிடிக்கப்பட்டு, வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது- என்றார். (எ)

# ஆறாம் வகுப்பு புத்தக பிரச்சனைக்கு பிரதமர் பொறுப்பேற்க வேண்டும்

இராதாகிருஷ்ணன் எம். பி. தெரிவிப்பு

நுவரெலியா, ஜன. 05

ஆறாம் வகுப்பு புத்தக பிரச்சனைக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய பொறுப்பேற்க வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொட்டக்கலை பிரதேச சபை உறுப்பினரும் கொட்டக்கலை வர்த்தக சங்கத் தலைவருமான விஸ்வநாதன் புஸ்பாவின் ஏற்பாட்டில் கொட்டக்கலை ஸ்டோனிகிளிப் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 500 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று கொட்டக்கலை பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை இராதாகிருஷ்ணன் எம். பி. வழங்கினார்.

மேலும், இந்த நிகழ்வில் பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொட்டக்கலை வர்த்தகர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், ஆறாம் வகுப்பு புத்தக பிரச்சனைக்கு பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (எ)

# தலவாக்கலையில் முகாமிலிருந்த 67 குடும்பங்கள் வெளியேற்றம்



தலவாக்கலை, ஜன. 05

நுவரெலியா- தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரேட்வெஸ்டன் தோட்டத்தில் உள்ள லயன் குடியிருப்புகளில் கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக மண்சரிவு அபாயம் மற்றும் வெடிப்புகள் காணப்பட்டன.

இதனால், குறித்த வீடுகளில் வசித்த 67 குடும்பங்களை சேர்ந்த 270 பேர் தற்காலிகமாக கிரேட் வெஸ்டன் தமிழ் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், கடந்த சில நாட்களாக அப்பகுதியில் சீரான காலநிலை நிலவி வருவதால் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகளால் அப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின் பின்னர், கிரேட்வெஸ்டன் தோட்டத்தில் பாரியளவிலான மண்சரிவு அபாயம் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இன்று பாடசாலைகள் மீள ஆரம்பமாகவுள்ள நிலையில், அங்கு தங்க வைக்கப்பட்டிருந்த மக்கள் நேற்று தற்காலிக முகாமிலிருந்து வெளியேறிச் சென்றனர். (எ)

# போதைப்பொருள் வியாபாரிக்கு ஐந்து நாட்கள் தடுப்புக்காவல்

கல்முனை, ஜன. 05

அதிகளவான போதைப்பொருட்களை இளைஞர்கள் மாணவர்களுக்கு விநியோகித்து வந்த பிரபல போதைப்பொருள் வியாபாரியை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை ஐந்து நாட்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மருதமுனை புறநகர் பகுதியில் இந்தக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்முனை விசேட அதிரடிப் படையினர் மற்றும் பெரிய நீலாவணை பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதலில் சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரி 30 கிராம் ஹெரோயின் மற்றும் 10 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைதானார். இந்தச் சந்தேக நபர் இதற்கு முன்னரும் போதைப்பொருள் குற்றச்சாட்டின் அடிப்படையில் சாய்ந்தமருது பொதுச்சந்தை மாடியில் கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த சந்தேக நபர் அண்மைக்காலமாக இளைஞர்கள், மாணவர்களுக்கு அதிகளவான போதைப்பொருட்களை மருதமுனை பகுதியில் விநியோகித்து வந்த நிலையில் இரகசிய தகவல் ஒன்றை தொடர்ந்து கைது செய் யப்பட்டார்.

இவ்வாறு கைதான 44 வயதுடைய சந்தேக நபரை நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் முஹம்மது கலீல் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 8 ஆம் திகதி வரை 5 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை டி. சி. டி. பி. என அழைக்கப்படும் அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பேற்று மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதுதவிர அம்பாறை மாவட்டத்தில் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போதைப்பொருளுடன் தொடர்புடையவர்களை கண்டறிவதற்காக போதைப்பொருள் ஒழிப்பு கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளது. கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பொலிஸ் பரிசோதகருமான பி. கஜேந்திரன் வழிகாட்டுதலில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ)

# "மாணவர்களிடம் பணம் அறவிடும் அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை"

நுவரெலியா, ஜன. 05

பாடசாலை மாணவர்களிடம் பணம் அறவிடு செய்யும் அதிபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்தார்.

பாடசாலை என்பது இந்த நாட்டின் எதிர்காலமாகும். அங்கு கல்வி கற்க வரும் மாணவர்களாக இருந்தாலும் சரி மாணவர்களை தரம் ஒன்றுக்கு உள்வாங்குகின்ற போதும் அதிக பணம் அறவிடும் அதிபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி நேற்று முன்தினம் பொகவந்தலாவ சென்மேரீஸ் தேசிய கல்லூரிக்கு சென்றார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், அரசாங்கத்தின் அனுமதியின்றி மாணவர்களின் பெற்றோர்களிடம் பணம் அறவிடும் பட்சத்தில் எம்மிடம் முறையிடலாம். டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் பொகவந்தலாவ சென் மேரீஸ் தேசிய கல்லூரியும் ஒன்று. இந்த பாடசாலையில் உள்ள பிரச்சனைகளை அதிபர் ஊடாக அறிந்து கொண்டேன். இந்த பாடசாலையில் நிலவும் அனைத்து பிரச்சனைகளுக்கும் வெகுவிரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்- என்றார். (எ)

# சம்மாந்துறை நீதிவான் ரஞ்சித்குமார் இடமாற்றம்

சம்மாந்துறை, ஜன. 05

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை நீதிமன்ற நீதிவானாக செயல்பட்டு வந்த ஏ. ரஞ்சித்குமார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, புதிய நீதிவானாக நூர்டீன் முஹம்மட் சர்ஜூன் இன்று திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

கடந்த காலங்களில் களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவானாக ஏ. ரஞ்சித்குமார் செயல்பட்ட போது, நீதிமன்ற களஞ்சிய சாலை பொருட்கள் மோசடி செய்யப்பட்டன. நீதிமன்ற களஞ்சியசாலையில் இருந்த சான்றுப் பொருட்களை மோசடி செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் அங்கு கடமையாற்றிய பதில் பதிவாளர் கைதான நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மேலும், நீதிமன்ற களஞ்சிய சாலை பொருட்கள் மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளை தொடர்ந்து நீதிச்சேவை ஆணைக்குழு சம்மாந்துறை நீதிமன்ற நீதிவாக செயல்பட்டு வந்த ஏ. ரஞ்சித்குமாரை இடமாற்றம் செய்துள்ளது. (எ-01)

# பாடசாலை சூழலில் மாணவர்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்த திட்டம்

கல்முனை, ஜன. 05

பாடசாலைகள் மீள ஆரம்பித்தலை முன்னிட்டு நேற்று அம்பாறை- சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு ஆராயப்பட்டன.

சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் வழிகாட்டலில் நுளம்பு கட்டுப்பாட்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. இந்த செயல்பாட்டில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்புக் களத்தடுப்பு உதவியாளர்களும் பங்கேற்றனர். இதில், நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான இடங்கள் கண்டறியப்பட்டு, அதனை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

டெங்கு நோய்த் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு பெறுவோம் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் மாணவர்களுக்கு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான கல்விச் சூழல் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்துள்ளது. (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கல்வி...

754.2 கோடி ரூபாய் பாடசாலைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தச் செலவிடப்படவுள்ளது.

மிகுதி நிதியில் பாடத்திட்ட மேம்பாட்டுக்கு 608.4 கோடி ரூபாய், மனிதவள மேம்பாட்டுக்கு 102. 6 கோடி ரூபாய், மதிப்பீட்டு முறைகளை நவீனமயப்படுத்த 29.8 கோடி ரூபாய் விழிப்புணர்வு திட்டங்களுக்கு 3.6 கோடி ரூபாய் என ஒதுக்கப்பட்டுள்ளன. இதுவரை நடைமுறையிலிருந்த பரீட்சையை மாத்திரம் மையமாகக் கொண்ட மற்றும் பாடங்களை மனப்பாடம் செய்யும் முறைக்கு இந்த மறுசீரமைப்பு முற்றுப்புள்ளி வைக்கிறது.

ஒரு கருவியைப் பற்றி புத்தகத்தில் படித்து அதன் பாகங்களை மனப்பாடம் செய்வதைவிட, அந்த கருவியை நேரடியாக இயக்கிப் பழகும் நடைமுறைத் திறனை மாணவர்களிடம் வளர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இதற்காகப் புதிய பாட அலகுகள் மற்றும் நவீன வகுப்பறை செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இந்தநிலையில், புதிய பாடத்திட்டங்கள் 2026ஆம் கல்வியாண்டில் அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வருகின்றன. இதன்படி, தரம் 6 மாணவர்களுக்கு ஜனவரி 21 ஆம் திகதியிலிருந்தும் தரம் 1 மாணவர்களுக்கு ஜனவரி 29 ஆம் திகதியிலிருந்தும் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வரும். இவற்றுக்கு இணையாக, மாணவர்கள் புதிய பாடங்களை தெரிவு செய்தல் - புதிய முறைமைக்கு அவர்களை தயார்படுத்துதல் போன்ற விழிப்புணர்வு திட்டங்கள் மாணவர்கள், பெற்றோர்களுக்காக முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த மறுசீரமைப்பை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக நாடு தழுவிய ரீதியில் ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 580 ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக 7,181 ஆசிரியர் பயிற்றுவிப்பு பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்போது இந்தப் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களில் 93 சதவீதமானோருக்கு பயிற்சிகள் முழுமையாக வழங்கி முடிக்கப்பட்டுள்ளன. வெறும் பாடத்திட்ட மாற்றத்துடன் மாத்திரம் நின்றுவிடாமல், மாணவர்கள் இந்தப் புதிய முறைமைக்கு இசைவாக்கம் அடைவதற்கான விசேட வேலைத்திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பாடத்தெரிவு, புதிய மதிப்பீட்டு முறைகள் குறித்து மாணவர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்படும். அத்துடன், இந்தப் புதிய கல்வி முறைமை குறித்துப் பெற்றோர்களுக்கு தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. புதிய கல்வி மறுசீரமைப்பை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு தேவையான பௌதிக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## சகல நாடுகளின்...

மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "ஐ. நா சாசனம் மற்றும் சர்வதேச சட்டங்களின்படி அனைத்து நாடுகளினதும் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும். அனைத்து ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடுகளும் இந்த விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இந்த விவகாரம் தொடர்பாக நாளை (இன்று) நடைபெறவுள்ள ஐ. நா. பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டத்தை தாமதமின்றி நடத்துமாறு இலங்கை தரப்பிலிருந்து முன்மொழியப்பட்டுள்ளது.

ஐ. நா. சாசனத்தின் அடிப்படை கொள்கைகளுக்கு முரணாக செயல்படுகின்றமை தொடர்பில் ஐ. நா. பொதுச் சபையிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் - என்றும் கூறினார்.

இதேநேரம், இந்த விவகாரத்தில் அவரின் கட்சியான ஜே. வி. பி.இன் கண்டனம் தொடர்பில் கேள்வி எழுப்பியபோது, "அரசாங்கம் என்பது வேறு, அரசியல் கட்சிகள் என்பது வேறு. அரசியல் கட்சிகள் தமக்கெனத் தனிப்பட்ட கருத்துகளைக் கொண்டிருக்க முடியும்", என்று கூறினார். (ஐ)

## தரம் 6...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை உறுதிப்படுத்தினார்.

அத்துடன், "அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் இந்த விடயம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது அரசாங்கத்தின் கூட்டு முயற்சி மற்றும் பொறுப்பாகும். பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக நாங்கள் எடுக்கும் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான நிலைப்பாடு இதுவாகும். எனவே, சிலர் தத்தமது அரசியல் மற்றும் ஏனைய குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பிரதமரை இலக்காகக் கொண்டு முன்வைக்கும் விமர்சனங்களை நாங்கள் முற்றாக நிராகரிக்கிறோம். அவ்வாறு எதுவும் இல்லை. இங்கு அரசாங்கத்தின் கூட்டுக் கொள்கையின் அடிப்படையிலான செயல்பாடே காணப்படுகிறது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் கொள்கை ரீதியான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே தேசிய கல்வி நிறுவகம் இந்த கல்விச் சீர்திருத்தங்களைத் தயாரித்தது. ஆகவே, கல்வி அமைச்சின் மூலமாகவே இவை அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. இதனை நடைமுறைப்படுத்துவது நம் அனைவரினதும் பொறுப்பாக மாறியுள்ளது. எனவே, இந்தச் செயன்முறையில் ஓரிடத்தில் குறைபாடு ஒன்று நிகழ்ந்துள்ளமையை நாம் மிகத் தெளிவாகக் கண்டோம்.

தரம் 6 பாடத்திட்டத்துடன் தொடர்புடைய பாடத் தொகுதியில் பாரதூரமான தவறு ஒன்று உள்ளடக்கப்பட்டது. அந்தத் தவறை கல்வி அமைச்சு தற்போது மிகத் தெளிவாக அவதானித்துள்ளது. அது அடையாளம் காணப்பட்டவுடன், பிரதமரின் ஆலோசனையின் பேரில், செயலாளரின் ஊடாக உடனடியாக உள்ளக தரவுகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த அறிக்கை தற்போது கிடைத்துள்ளது. அந்த அறிக்கையின் அடிப்படையில், தவறுக்குக் காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான எதிர்கால செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன -என்றார். (ஐ)

## வெனிசுலா...

வெனிசுலாவுக்குள் அத்துமீறி நுழைந்து, அங்கு மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைக் கடத்திச் சென்று, அமெரிக்கா வெனிசுலாவுக்கு எதிராக மேற்கொண்ட இராணுவ ரீதியிலான ஆக்கிரமிப்புத் தலையீட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

"உலகின் எந்தவொரு சுதந்திர, இறைமையுள்ள நாட்டைப் போலவே வெனிசுலாவினதும் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் மற்றும் ஆட்சியாளர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் இறைமை அதிகாரம் அந்த நாட்டு மக்களுக்கே உரியது. அதனை மீறுவதற்கு எந்தவொரு வல்லரசுக்கும் உரிமை இல்லை.

"நவீன சமூகமும், அரச நிர்வாகமும் மிகவும் பண்பட்டதாக இருக்க வேண்டும் என்பது பொதுவான நம்பிக்கையாகும். ஜனநாயகம், மனித உரிமைகள், நாடுகளின் சுதந்திரம் மற்றும் இறைமை என்பன உலகமே ஏற்றுக்கொள்ளும் கோட்பாடுகளாகும். எந்தக் காரணத்திற்காகவும் அவற்றை மீறி, நாடுகளுக்குள் இராணுவத் தலையீடுகள் அல்லது ஆக்கிரமிப்புகளை மேற்கொள்வது நவீன நாகரிக உலகில் நியாயமானதல்ல. இத்தகைய சூழ்நிலையில், அமெரிக்காவால் வெனிசுலாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பலவந்தமான இராணுவத் தலையீட்டை உலகில் எவரும் அங்கீகரிக்க மாட்டார்கள் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

எனவே, அமெரிக்கா வெனிசுலாவுக்கு எதிராக மேற்கொண்ட இந்த இராணுவ ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் மக்கள் விடுதலை முன்னணியினரான நாம், வெனிசுலாவின் இறைமை மற்றும் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கிறோம்", என்றுள்ளது. (ஐ)

## 600 கிலோ...

போதைப்பொருளை பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸார் கைப்பற்றி நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தியிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நிறைவடைந்திருந்த நிலையில் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் சான்றுப் பொருளான கஞ்சா அழிக்கப்பட்டது.

பொலிகண்டி குப்பைத் திடலில் பொலிஸாரின் பாதுகாப்புடன் 600 கிலோ கஞ்சாவும் தீ வைத்து எரிக்கப்பட்டது. (ஐ)

## யாழ்...

ஏக்கர் காணியைத் தவிர ஏனைய காணிகளை காணி உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும்.

திஸ்ஸ விகாரைக்கு எனச் சொந்தமாகக் காணிகள் உள்ளன. அந்தக் காணிகள் எனது கட்டுப்பாட்டின் கீழ்தான் உள்ளன. எனவே, தற்போதுள்ள திஸ்ஸ விகாரையை என்னிடம் பொறுப்பளித்தால், விகாரை அமைந்த 1.2 ஏக்கர் காணிகளின் உரிமையாளர்களுக்குத் எனது பொறுப்பின்கீழ் உள்ள திஸ்ஸ விகாரை காணியில் 1.2 ஏக்கர் காணியை மாற்றீடாக வழங்கத் தயார்." - என்றார். (ஐ)

## கன்னியா...

பேசிய அவர்,

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றில் சில வருடங்களுக்கு முன்னதாக பிரச்னைகள் இருந்தமை அனைவருக்கும் தெரியும். அங்கிருந்த பிள்ளையார் கோயிலை மீளவும் புனரமைக்க நடவடிக்கை எடுத்தபோது அது தடுக்கப்பட்டது. கோயில் இருந்த மேடையில் பௌத்த கொடி நாட்டப்பட்டு, எவ்வித கட்டுமானமும் செய்ய முடியாது என்று தொல்லியல் திணைக்களம் கூறியது.

இதன் பின்னர், 2019ஆம் ஆண்டு விகாரை ஒன்றை கட்டும் முயற்சி எடுக்கப்பட்டது. அதனை, நாம் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதனை கட்டுவதற்கு இடைக்கால தடை பெறப்பட்டது.

எனினும், அதில் முன்னர் விகாரை இருந்ததாக தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தினார். குறித்த இடத்தில் பிள்ளையார் ஆலயம் 150 ஆண்டுகள் இருந்தமைக்கான ஆதாரங்கள் இருந்தன. ஆனால், 2000ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் விகாரை இருந்ததாக நீதிமன்றில் காண்பிக்கப்பட்டது. இந்த சூழ்நிலையில் ஓர் இணக்கம் எட்டப்பட்டது. பண்டைய விகாரை அங்கு இருந்திருந்தால் அதனை பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு தொல்லியல் திணைக்களத்துக்கு இருக்கிறது. ஆனால் மீள கட்டுமானம் எதுவும் செய்ய முடியாது.

150 ஆண்டுகளாக பிள்ளையார் ஆலயம் இருந்தமையால் அந்த வளாகத்தில் இன்னோர் இடத்தில் கோயிலை மீளவும் நிர்மாணிக்கலாம் என்ற இணக்கப்பாட்டுடன் வழக்கு முடிவுறுத்தப்பட்டது. அந்த இணக்கப்பாட்டுக்கு மாறாக - அந்த நடவடிக்கைக்கு முரணாக சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அந்தக் காணியின் உரிமையாளர் ரமணி அம்மா இது தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளார். குறித்த வழக்கில் இரண்டாவது பிரதிவாதியாக இருந்த அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார். இன்று (நேற்று) காலை நானும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குகதாசனுடன் சென்று அந் இடத்தை பார்வையிட்டேன்.

பண்டைய விகாரை இருந்ததாகக் கூறப்படும் மேட்டை பேணிப் பாதுகாப்பதற்கு மேலதிகமாக வேறு சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எனவே, இது தொடர்பில் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துவது என்று தீர்மானித்துள்ளோம் - இணக்கப்பாட்டுக்கு மாறாக நடந்தால் நீதிமன்றம் செல்வோம் - என்றார். (ஐ)

## வடக்கு...

ரூபாயும் கிளிநொச்சி மாவட்டத்தில் 633 சுற்றிவளைப்புகளில் 608 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 49 இலட்சத்து 89 ஆயிரத்து 500 ரூபாயும் அபராதமாக விதிக்கப்பட்டன.

இதேபோன்று, முல்லைத்தீவு மாவட்டத்தில் 591 சுற்றிவளைப்புகளில் 532 வழக்குகள் பதியப்பட்டு, 31 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாயும் மன்னார் மாவட்டத்தில் 538 சுற்றிவளைப்புகளில் 479 வழக்ககள் பதிவு செய்யப்பட்டு 22 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாயும் வவுனியா மாவட்டத்தில் 619 சுற்றிவளைப்புகளில் 671 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 66 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் அறவிடப்பட்டன. (ஐ)

## சகல பாடசாலைகளும்...

உயர்தர பரீட்சைக்காக எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.

இரண்டாம் கட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 13ஆம் திகதி வரை நடபெறும். தொடர்ந்து, க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்காக பெப்ரவரி 14 முதல் மார்ச் 2ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும். எனினும், முஸ்லிம் பாடசாலைகளுக்கு மார்ச் 22 ஆம் திகதி வரை ரமழான் நோன்புக்காக விடுமுறை வழங்கப்படும்.

மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கை தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கு மார்ச் 3ஆம் திகதியும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு மார்ச் 23ஆம் திகதியும் ஆரம்பமாகும்.

இதேவேளை, தரம் 1இற்கான வகுப்புகள் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும்.

டிசெம்பர் 22ஆம் திகதியும், முஸ்லிம் பாடசாலைகளுக்கு டிசெம்பர் 26ஆம் திகதியும் 2025ஆம் ஆண்டு கல்வியாண்டை முடிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்திய...

தொடர்ச்சியான ஈடுபாட்டின் ஒரு பகுதியாகவே அவரின் இந்த வருகை அமையவுள்ளது. நாளை மறுதினம் புதன்கிழமை இலங்கை வரும் இந்திய இராணுவ தளபதிக்கு இராணுவ மரியாதை அளிக்கப்படும்.

இந்தப் பயணத்தில் இந்திய இராணுவ தளபதி, இலங்கை இராணுவ தளபதி, பாதுகாப்பு பிரதி அமைச்சர், பாதுகாப்பு செயலாளர், மூத்த இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடுவார். அத்துடன், இலங்கையில் போரில் கொல்லப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையினரின் நினைவுச்சின்னத்திலும் அஞ்சலி செலுத்துவார்.

இதேவேளை, இந்திய இராணுவ தளபதி இன்று திங்கட்கிழமை ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு செல்லவுள்ளார். அங்கு இரு நாட்கள் தங்கியிருக்கும் அவர், அங்கிருந்து இலங்கை வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சிறையிலுள்ள சோமரத்னவை இவ்வாரம் சந்திக்கிறது ஓ. எம். பி. அதிகாரிகள் குழு!

கொழும்பு, ஜன. 05

**செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான மேலதிக தகவல்களை பெறும் நோக்கில் பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரண தண்டனை கைதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை காணாமல் போனோர் பற்றிய பணிமனை அதிகாரிகள் இந்த வார இறுதியில் சந்திக்கவுள்ளனர்.**

லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, கிருஷாந்தி படுகொலை குறித்தும், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும் இந்த விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரின் மனைவி எஸ். சி. விஜயவிக்ரம ஊடாக கடந்த 09.07.2025 எனும் திகதியிடப்பட்ட கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு அனுப்பிவைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இழைத்த குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்படல்கள், மனிதப் புதைகுழிகள் மற்றும் அவற்றுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களின் பெயர் விவரங்கள் உள்ளிட்ட சகல உண்மைகளையும் வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் சோமரத்ன ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய சில உண்மைகளையும், எதிர்வருங்காலத்தில் சாட்சியம் வழங்குவதற்குத் தயாராக உள்ள விடயங்களையும் உள்ளடக்கி கடந்த ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் சோமரத்ன ராஜபக்ஷ தனது சட்டத்தரணி முன்னிலையில் சத்தியக்கடதாசி வழங்கியிருந்தார்.

அந்த சத்தியக் கடதாசியின் ஒரு பிரதி காணாமல் போனோர் பற்றிய பணிமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட துடன் மேலும் இரு பிரதிகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கிடமும், உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல் திட்டத்தின் அதிகாரிகளிடமும் கையளிக்கப்பட்டன.

இந்த நிலையில், கடந்த ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி சோமரத்ன ராஜபக்ஷவை வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்த காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள், கடந்த நவம்பர் மாதம் 26 அல்லது 27 ஆம் திகதி மீண்டும் அவரைச் சந்திப்பதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் அனுமதி கோரியிருந்தனர். இருப்பினும் டித்வா சூறாவளியை அடுத்து அச்சந்திப்புக்கான அனுமதி வழங்கல் தாமதமடைந்த நிலையில், இந்தச் சந்திப்பு இவ்வார இறுதியில் நடைபெறவுள்ளது. (ஐ)

## வீடுகளை இழந்த மக்களுக்கு 10ஆம் திகதிக்குள் கொடுப்பனவு

### அமைச்சர் பிமல் ரத்நாயக்கா

கொழும்பு, ஜன. 05

டித்வா சூறாவளியால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கான 50 இலட்சம் ரூபாய் கொடுப்பனவை இந்த மாதத்தின் முதல் 10 நாட்களுக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அனர்த்தம் இடம்பெற்று ஒரு மாதம் கடப்பதற்கு முன்னர் சேதமடைந்த வீதிகளில் 99 சதவீதமானவற்றை புனரமைக்க அரசாங்கத்தால் முடிந்துள்ளது. வீடுகளை முற்றாக இழந்தவர்கள் ஒரு வருடம் நிறைவடைவதற்குள் தமக்கான வீட்டை அமைத்துக்கொள்ள உதவுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல பிரதேசங்களை சேர்ந்த மக்களும் விவசாயிகளும் தமக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான நஷ்டஈடு இதுவரை உரிய முறையில் கிடைக்கவில்லை என்று குற்றம் சுமத்தியுள்ளனர். (ஐ)

## ஐ. ம. ச., ஐ. தே. கட்சிகளின் இணைவு சுபச் செய்தியே

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 05

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சியின் இணைவை நாம் சுப செய்தியாகவே பார்க்கின்றோம். இது இந்த நாட்டு அரசியலில் இடம்பெற வேண்டிய முக்கியமான விடயமாகும். கட்சிகள் இணைந்து கூட்டணிகள் அமைக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகுமென சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷவிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதில் அளித்துள்ளார்.

மேலும், அரசாங்கம் தவறிழைத்தாலும், அமைச்சர்கள் தவறிழைத்தாலும் அதிகாரிகளே பதவி விலக வேண்டும். ஆனால், கடந்த ஆட்சி காலங்களில் தவறுகள் இடம்பெற்றிருந்தால் அதற்கு காரணம் அரசியல்வாதிகள். இதுவே, இந்த அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலாகும் - என்றார். (ஐ)

## 10 புதிய மருந்து வகைகளை அறிமுகப்படுத்த திட்டம்!

கொழும்பு, ஜன. 05

இந்த ஆண்டில் 10 புதிய மருந்து வகைகளைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் 400 கோடி மாத்திரைகள் மற்றும் குளிசைகளை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக அது குறிப்பிட்டுள்ளது.

தற்போது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் 70 வகையான மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதேவேளை, கடந்த வருடம் 5 புதிய மருந்துகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மருத்துவ விநியோகப் பிரிவு வழங்கிய அனைத்து கொள்வனவுக் கட்டளைகளையும் தட்டுப்பாடின்றி விநியோகிக்கவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குற்றங்களுடன் தொடர்பு; 596 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜன. 05

பொலிஸ் அதிபரின் உத்தரவுக்கு அமைய நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் 596 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் 28 பேர் குற்றங்களுடன் நேரடி தொடர்புடையவர்கள் என்றும் 191 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், 137 பேர் திறந்த பிடியாணை உத்தவு பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 264 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 30 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3 ஆயிரத்து 720 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## போதைப்பொருட்களுடன் 806 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜன. 05

ஜனாதிபதியின் பணிப்பில் பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்படும் முழு நாடுமே ஒன்றாக தேசிய வேலைத் திட்டத்தின்கீழ் போதைப் பொருட்களுடன் 806 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் ஒரு கிலோ 291 கிராம் ஹெரோயின், 3 கிலோ 424 கிராம் ஐஸ், 904 கிராம் கஞ்சா, 18 ஆயிரத்து 357 கஞ்சா செடிகள், 120 கிராம் குஷ், 244 கிராம் ஹஷீஷ், 111 போதை மாத்திரைகள், 34 கிராம் மதனமோதகம் மற்றும் 796 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைதான 806 பேர்களில் 17 பேர் தடுப்பு காவல் உத்தரவு பெற்றவர்களாவர். அத்துடன், 10 பேரை மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## வெவ்வேறு விபத்துகளில் ஐந்து நபர்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 05

நாட்டில் நேற்று காலை வரை யான 24 மணிநேரத்தில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துகளில் ஐவர் உயிரிழந்தனர்.

புத்தளம் - மாரவில - திசேராபுர - அடப்பர சந்தியில் மோட் டார் சைக்கிள் வேகத்தால் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இதில், 28 வயது இளைஞர் உயிரிழந்தார். அவருடன் பயணித்தவர் படுகாயமடைந்து மாரவில மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

களுத்துறை - மீகஹதென்ன பொலிஸ் பிரிவில் - பெலவத்த - ஹொரவல வீதியில் சைக்கிளில் சென்றவரை மோட்டார் சைக்கிள் மோதியது. இதில், இரு வாகனங்களிலும் பயணித்தவர்கள் படுகாயமடைந்தனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்தார். அதே இடத்தைச் சேர்ந்த 84 வயது முதியவரை உயிரிழந்தார்.

அதேநேரம், அநுராதபுரம் - நொச்சியாகம - தல்கஸ்வெள பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகின. இருவரும் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில், 52 வயதான ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - கெஸ்பேவ பகுதியில் கெப் ரக வாகனம் வீதியை கடந்த பாதசாரியை மோதியதில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் பொல்கஸ்ஸோவிட்ட பகுதியைச் சேர்ந்த 52 வயது நபராவார்.

களுத்துறை - பேருவளை புனித ஆன் வீதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து சுவருடன் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தார். 26 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

## பெப். 28ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர சாரதி அனுமதி பத்திரம்!

கொழும்பு, ஜன. 05

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் அனைவருக்கும், எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதிக்குள் நிரந்தர அட்டைகளை அச்சிட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்காக 8 இலட்சம் அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. தற்போது அட்டை விநியோக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 2 இலட்சத்து 40 ஆயிரம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்பட்டு, விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் அனைவருக்கும், எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதிக்குள் நிரந்தர அட்டைகளை அச்சிட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அட்டை தட்டுப்பாடு காரணமாக சுமார் 4.5 இலட்சம் பேருக்குத் தற்காலிக அனுமதிப்பத்திரங்களே வழங்கப்பட்டிருந்தன. எஞ்சும் 2 இலட்சத்து 10 ஆயிரம் அட்டைகளும் பெப்ரவரி இறுதிக்குள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படும்.

பொதுவாக மாதத்துக்கு 60 ஆயிரம் முதல் 80 ஆயிரம் புதிய சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்படுகின்றன.தற்போது போதியளவு அட்டைகள் ஓடர் செய்யப்பட்டுள்ளதால், இனிவரும் காலங்களில் அட்டை தட்டுப்பாடு ஏற்படாது - என்றும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 05.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.